Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0
பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0
வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 { ஈரோடு 1-2-1947 தைமீ 19உ. { மலர் 17

## 'நாம் ஒன்றுபடவேண்டும்'

(பெரியார் ஈ. வெ. ரா.)

28-11-37ல் ஆம்பூரில் முஸ்லிம்கள் அளித்த வரவேற்பின்போது பெரியார் நிகழ்த்திய சொற்பொழிவு

இதைப் படிப்போர் பெரியாரின் திராவிட நாட்டு, திராவிடர்கள்-முஸ்லிம்கள் ஒற்றுமைக்கொள்கை இன்று மாத்திரம் அல்லாமல் இன்றைக்கு 10-ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எட படிப்பட்டது என்பதை உணரலாம் என்று கருதியே இப்போது "கதிர்" என்கின்ற மாதவெளியீட்டில் வெளியானதை வெளியிடுகிறோம்.

குடி அரசின் பழய இதழ்களைப் பார்த்தால் 20 ஆண்டுக்கு முன்னர் ஒற்றுமைக்கொள்கை இதுபோன்றதே என்பதை உணரலாம்.

ஈ. வெ. ரா. பேச்சு.

"சமூகச்சம்பந்தமாய் முஸ்லிம்கள் அனுசரித்துவரும் சில கொள்கைகளை நான் ஆதரிக்கிறேன். முக்கியமாக உங்கள் மார்க்கத்தில், மனிதன் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்பதும், மக்களுக்குள் ஜாதிபேதப் பிரிவு இல்லை என்பதும், சமூகக் காரியங்களில் உள்ள ஒற்றுமையும் மனிதாபிமானமுள்ள எந்த மனிதனும் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயமாகும்.

இந்துமதத்தின் யோக்கியதையும், நம் நாட்டின் கிறிஸ்து மதத்தின் யோக்கியதையும் முறையே ஆதாரத்திலும் அனுபவத்திலும் அப்படி இல்லை. இதை நான் அடிக்கடி மக்களுக்கு எடுத்துக்காட்டி வருகிறேன். மற்ற மதக்காரர்கள் இதற்காகப் பொறாமையும், கோபமும் அடைகிறார்களே தவிர தங்களைத் திருத்திக்கொள்கிறார்களில்லை.

தவிர அரசியல் விஷயத்திலும் நான் பெரிதும் முஸ்லிம்களுடைய ஆதரவை எதிர்பார்த்தவனாக இருக்கிறேன். ஏனெனில் கல்வியிலும் சமூகத்திலும், பொருளாதாரத்திலும் அரசியலிலும் பிற்படுத்தப்பட்டு-தாழ்த்தப்பட்டுக் கிடந்த மக்கள் முன்னேற்றமடைய முயல, வழிகாட்டியவர்கள் முஸ்லிம்களேயாகும். எனது தோழர் கலிபுல்லா சாகிப் அவர்கள் "சுயமரியாதை இயக்கத்துக்கு 1300 வருஷத்திற்கு முன்பே வழிகாட்டியது இஸ்லாம் மார்க்கமே" என்றார். ஆனால் நான் ஜஸ்டிஸ் இயக்கத்துக்கும்கூட 35 வருஷங்களுக்கு முன்னமேயே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு வழிகாட்டியவர்கள் முஸ்லிம்களேயாகும், அதாவது முஸ்லிம் லீகேயாகும் என்று சொல்லுவேன்.

முஸ்லிம் லீக், ஜஸ்டிஸ்கட்சி, சுயமரியாதை இயக்கம் ஆகியவை ஒன்றுபடவேண்டும். ஏனெனில் முஸ்லிம்கள்தான் முதன்முதல் காங்கரசின் சூழ்ச்சியை உணர்ந்து, பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் முற்போக்கடைய வகுப்பு நீதி, வகுப்பு உரிமை, வகுப்புப் பிரதிநிதித்துவம் வழங்கவேண்டுமென்று வாதாடி 1910லேயே தனித்தொகுதிமூலம் உரிமை பெற்று 1916ல் காங்கரஸையும், ஒப்புக்கொள்ளும்படி செய்தவர்கள் ஆவார்கள். ஆதலால் இன்று வகுப்பு நீதியையும் வகுப்பு உரிமையையும் மக்களுக்கு முதல் முதல் இவ்வளவு ஞாபகப்படுத்திக் கொடுத்தவர்களே முஸ்லிம்கள் என்கிறேன். அந்த ஒரு காரணத்தாலேயே ஜஸ்டிஸ் கட்சிக்காரரும், சுயமரியாதைக்காரரும், முஸ்லிம்களை ஆதரித்தும், அண்டியும் தொண்டாற்றவேண்டுமென்று மக்களுக்குப் போதித்து வருகிறேன்.

சில தேசியப்புலிகள் என்னும் காங்கரஸ் வீரர்கள், நான் இம்மாதிரி பேசுவதுபற்றி மனதில் சங்கடப்படலாம். என்னையும் கேவலமாக எண்ணலாம். நான் இதைக் கொஞ்சமும் லட்சியம் செய்வதில்லை. மேலும் இதை ஒரு கௌரவமாகவே மதிக்கிறேன். ஆனால் பார்ப்பனர் வால் பிடித்துக்கொண்டு, பார்ப்பனர்களுக்கு இடம் கொடுத்து நமது சமூகத்தைக் காட்டிக்கொடுக்கும் ஈனர்களைக் கண்டுதான் நான் வெட்கமடைகிறேன்

நமக்கும் பார்ப்பனர்களுக்கும் என்ன சம்பந்தம்? பிச்சைக்குவந்தவன் பெண்டுக்கு மாப்பிள்ளையானான் என்பதுபோல, எந்த நாட்டிலிருந்தோ இந்த நாட்டிற்குப் பிழைக்க வந்தவன், மதஆதிக்கம்—ஜாதி மேன்மை பொருளாதார ஆதிக்கம்—மோட்ச ஆதிக்கம்—அரசியல் ஆதிக்கம் ஆகியவைகளைக்கொண்டு தங்களைக் கடவுள் என்றும் நம்மை அவர்களது அடிமைகள் என்றும், வைப்பாட்டி மக்கள் என்றும் ஆதாரபூர்வமாகச் சொல்லி—அநுபவ பூர்வமாக அடக்கி ஆண்டுவருபவனை மானமில்லாமல் சாமி என்று கூப்பிட்டுக்கொண்டு—அவன் கால் அலம்பிய தண்ணீரை மோட்ச சாதனம் என்று குடித்துக்கொண்டு திரிவதை விட நம்மைச் சோதரர்களாய், தங்கட்குச் சமமான மனிதர்களாய்க் கருதும் முஸ்லிம்களைச் சமத்துவமாய் அளவளாவுவதில் குற்றம் என்ன என்று அவர்களைக் கேட்கிறேன்.

பழைய நிலையை நினைத்துப் பாருங்கள். இந்நாட்டிலுள்ள முஸ்லிம்கள் 100க்கு 95பேர் நமது ரத்தக் கலப்பு உள்ளவர்களேயாவார்கள். எப்படியெனில் ஆரியக் கொடுமைக்கு முன் அவர்களும் நாமும் இந்நாட்டுப் பழங்குடி மக்களேயாவோம். ஆரியக் கொடுமை தாங்கமாட்டாமல் அவர்களது சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள இஸ்லாமானவர்கள் அநேகர் உண்டு. ஆனால் ஆரியர்கள் இப்படி இல்லை. நம்மையும் இழிஜாதியாக்கிவிட்டு நமது பெண்களையும் பெண்டாள வேத சாஸ்திரங்கள் எழுதிக்கொண்டவர்கள். மலையாளத்தைப்பார்த்து அதிலிருந்தும், ஜஸ்டிஸ், சுயமரியாதை இயக்கங்களுக்கு முன்பு தமிழர்கள் நிலை எப்படி இருந்திருக்குமென்று நினைத்து அதிலிருந்தும் உணர்ந்து பாருங்கள்; 50, 60, வயதுவந்த தமிழர்களைக் கேட்டுப் பாருங்கள்.

ஆகவே உண்மைத் தமிழன், பார்ப்பனனின் திரிவதைவிட ஒரு முஸ்லிம் பின் திரிபவன் எவ்வளவோ சுயமரியாதைக்காரனாகிறான் என்பது என் அபிப்பிராயம். இதை நான் சொல்லுகிறேன் என்றால் எனக்குப் பலபேர் மொட்டைக்கடிதங்கள் எழுதுகிறார்கள். வெளிப்படையாகக் குறைகூறுகிறார்கள். அதற்கு ஆகவே இதைச் சொல்லுகிறேன்.

இன்று பார்ப்பனரல்லாத மக்கள் பார்ப்பானது சூழ்ச்சியிலிருந்து— பார்ப்பன ஆதிக்கத்திலிருந்து விடுபடவேண்டுமானால் பார்ப்பனர்களது ஒற்றரான காந்தியாரின் விஷமத்தனமான கொடுமைகளிலிருந்தும் தப்பவேண்டுமானால் நமக்குக் கண்டிப்பாக முஸ்லிம்களின் உதவி தேவையாக இருக்கிறது. முஸ்லிம்களும் இன்று நம் நிலையில்தான் இருந்துகொண்டு பல சங்கடங்களை அனுபவித்துக்கொண்டு நம் ஒத்துழைப்பை நாடுகிறார்கள். பார்ப்பன மந்திரி ஆட்சியானது முஸ்லிம் சமூகத்திற்கும் நம் சமூகத்திற்கும் சேர்த்துத்தான் ஒரே குழி வெட்டுகிறது.

முஸ்லிம்கள் நிலையும் நம் நிலையைப் போன்றதே. ஆனதினால்தான் முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்கும் ஒரு இயற்கை உறவு ஏற்படுகிறது.

இன்று பார்ப்பன ஆதிக்கத்துக்கு எமனாய் இருப்பது தென்னாட்டில் சுயமரியாதை இயக்கமும் வடநாட்டில் முஸ்லிம் லீகுமேயாகும். இரண்டையும் எப்படியாவது ஒழித்துவிடவேண்டுமென்று பார்ப்பனர்கள் விரதமெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

'ஜின்னாவுக்குத் தாடி இல்லாததினால் அவர் முஸ்லிம் அல்ல" என்று ஒரு முஸ்லிமைவிட்டே சொல்லச் சொல்லுகிறார்கள். அதுபோலவே கடவுள்போல் உள்ள புரட்டையும் கோயில் குளங்களில் நடக்கும் கொள்ளையையும் எடுத்துச் சொல்லுவதால், நான் நாஸ்திகன் என்றும், தமிழன் அல்ல என்றும், சில அன்னக்காவடிகளைவிட்டுச் சொல்லச்சொல்லுகிறார்கள். இவற்றைக் கண்டு அறிவுள்ள மனிதன் எவனும் மலைத்துவிடமாட்டான். ஆனாலும் முஸ்லிம்களில் சிலர் சுயமரியாதை இயக்கம் நாஸ்திக இயக்கம் என்று பயப்படுவதாகத் தெரிகிறது.

நான் ஒன்று கூறுகிறேன். அதாவது "சுயமரியாதை இயக்கத்துக்கு என்று வகுத்திருக்கும் கொள்கைகளில் நாஸ்திகம் ஒரு கொள்கையாகவோ-நிபந்தனையாகவோ குறிப்பிட்டிருக்கவில்லை" என்பதேயாகும்.

"பகுத்தறிவுக்கும் சுயமரியாதைக்கும் கட்டுப்பட்டு நடக்கும்படி மக்களுக்குச் சுயமரியாதை உணர்ச்சியை உண்டாக்குதல்" என்பதே சுயமரியாதை இயக்க அங்கத்தினர்கள் சேர்க்கும் ரசீதின் பின்புறம் உள்ள கொள்கை.

ஆதலால் இந்த நெருக்கடியான சமயத்தில் நம் இரு சமூகங்களும் தோளோடு தோள் புனைந்து வேலை செய்யவேண்டும்.

## பிறப்பு

14-1-47ல் புதுக்கோட்டை அறிவுவளர்ச்சிக் கழக உபதலைவர் தோழர் எஸ். வி. சுப்பையா அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் ராமு அம்மாள் அவர்கள் ஆண் குழந்தையீன்றெடுத்தனர். குழந்தைக்கு இளங்கோ' என்ற பெயரிடப்பட்டது. அதன் நினைவாகக் குடியரசு, விடுதலை, திராவிடநாடு முதலிய பத்திரிகைகளுக்கு ஒவ்வொரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது

## மதிப்புரை

'தமிழகம்'

'தமிழகம்' என்ற மாதவெளியீட்டின் பதிப்பாசிரியர் தோழர் எஸ். எம். சஞ்சீவிராஜ் அவர்கள் ஆவர்.

இவ்வெளியீடு திராவிடர் முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டது. சிறந்த அரசியல் கட்டுரைகளும், சமுதாயச் சீர்திருத்தக் கட்டுரைகளும், உணர்ச்சியூட்டும் கவிதைகளும் 'தமிழகத்தில்' மிளிர்கின்றன.

இதன் விலை 4 அணாதான்.

கிடைக்குமிடம்:

தமிழகம் பிரசுராலயம், தெப்பக்குளம்
திருச்சி.

o o

குஞ்சாலாடு,

'குஞ்சாலாடு' என்ற குறுநாவல் தோழர் நையாண்டி பாரதி அவர்களால் எழுதப்பெற்றது குஞ்சாலாடு என்று பெயரிட்டு எழுதப்பெற்ற கதை முற்றிலும் கற்பனைதான். ஆனால் அறிவிக்கு விருந்து. நகைச்சுவை நிறைந்தது.

உலகின்கண் நிகழும் நன்மை தீமைகள் எல்லாம் ஆண்டவன் படைப்பில் நிகழும் திருவிளையாடல்கள் என்று கூறுகின்றவர்களை நையாண்டி செய்கின்றார் தோழர் நையாண்டி பாரதி. உள்ளபடியே உலகில் நடைபெறும் எல்லாச் செயல்களுக்கும் கடவுள்தான் காரணமாவென்று மக்களைச் சிந்திக்கும்படித் தூண்டுகின்றார் நையாண்டி பாரதி இக்கதையின் வாயிலாக.

மக்களிடையே நடைபெறும் சூது, சூழ்ச்சி, வஞ்சகம், ஏமாற்றம், விபசாரம் முதலிய இழிச்செயல்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன 'குஞ்சாலாடு' என்ற இக்கதையில். யாவரும் படித்தற்குரியது.

கிடைக்குமிடம்: சாந்தி நிலையம்
துறையூர், திருச்சி.

---

நீடாமங்கலம் 'அர்ச்சுனன்' திராவிட இளைஞர் கழகத்தின் சார்பில் 14-1-47ல் திராவிடர் கழகக்கொடியாகிய கருப்புக்கொடி ராசவீதியில் ஏற்றி வைக்கப்பட்டது. நீடாமங்கலம் க. ச. ப. வீரர்களும் கொடி ஏற்றுவிக்க ஒத்துழைத்தனர்.

## மதுரைமாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டம்

மதுரை மாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் 26-1-47 மாலை 4மணிக்குச் சோழவந்தானில் தோழர் டி. ஆவுடையப்பன் அவர்களின் இல்லத்தில் மதுரை தோழர் ஆர். இ. ராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மதுரை, திருமங்கலம், நிலக்கோட்டை, வாடிப்பட்டி, திண்டுக்கல், முதலிய பல இடங்களிலிருந்து பல தோழர்கள் கலந்துகொண்டனர்.

கோவை மாவட்ட திராவிடர் கழக முன்னாள் தலைவர் தோழர் என். அர்ச்சுனன், சேலம் எம். ஆர். சித்தையன் ஆகியோரின் மறைவு குறித்து இரங்கற் தீர்மானமும் மதுரை மாவட்ட திராவிடர் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகிகளே திராவிடர் கழக நிதிக்கமிட்டியினராயிருந்து நிதி வசூலிப்பதைத் துரிதப்படுத்துவது என்ற தீர்மானமும், கட்சி நிதி வசூலானபின் மதுரையில்நடந்த மாகாணக் கருப்புச் சட்டை மாநாட்டு நஷ்ட ஈடுக்காக வசூல் ஏற்பாடுகள் செய்வதென்ற தீர்மானமும், லேபர் யூனியனுக்கும், மதுரைப் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கும் மதுரையில் நடந்த கலவர வழக்கில் கலவரத்திற்குச் சம்பந்தமில்லாத திராவிடர் கழகத் தோழர்களில் சிலரை சம்பந்தப்படுத்தியிருப்பதால் அக் கலவரத்தில் திராவிடர் கழகத் தோழர்கள் சம்பந்தப்படவில்லையென்பதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தூதுகோஷ்டியின் மூலம் அறிவிப்பதென்ற தீர்மானமும் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்ட பின்னர் கீழ்க்காணும் தோழர்கள் கோவை மாவட்ட திராவிடர்கழகத்திற்கு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்:-

திண்டுக்கல், எம். ஆர். மத்திரன்.

உபதலைவர்கள்:-

1. வாடிப்பட்டி எஸ். ஆர். சுப்பையா

2. மதுரை கே. ஐ சுக்குனி.

செயலாளர்:-

சோழவந்தான் டி. ஆவுடையப்பன்.

துணைச்செயலாளர்:-

மதுரை எம். ஆர். ராமசாமி.

பொருளாளர்:

மதுரை ஆர். இ. ராஜன்.

அமைப்பாளர்:- எஸ். பழனிவேல்.

கௌரவ பிரசாரகர்கள்:-

1 நிலக்கோட்டை முத்திருவாண்டி

2 மதுரை எம். அய்யாசாமி

நிர்வாக உறுப்பினர்கள்:-

மதுரைநகர்: கே. எஸ். ராசமாள், டி. வி. தங்கராசு, டி. எஸ். முத்து, ராமசாமி, துரைராசு, பீர், எம். எஸ். ராமய்யா, முத்திருவாண்டி, பழனிசசாமி.

திண்டுக்கல்:- ராஜா, எ. சிதம்பரம், சி. பாலச்சந்திரன், சீனுவாச துரைராசன்.

கல்வார்பட்டி:- ஜீ. லட்சுமணன் வீரராசன்.

நிலக்கோட்டை:- சையது இப்ராகீம், ரத்தினசபாபதி, சூரியநாராயணன், சி. பெருமாள்.

பட்டிவீரன்பட்டி.- கீர்சாத்தலிங்கம், எஸ். மீனாட்சிசுந்தரம்.

வாடிப்பட்டி:- ஜெயசிங், பால்சாமி.

சோழவந்தான்:- எஸ். வி சண்முகம், எஸ் பழனியப்பன், எம். சண்முகசுந்தரம்.

திருமங்கலம்:- எம். எஸ். ராசமாணிக்கம், எம். தருமர், எஸ். பி. அனஞ்செயப்பெருமாள்.

பெரியகுளம்:- ஆர். சுவாமிநாதன்.

மற்ற தாலுக்காக்களின் நிர்வாகஸ்தர்கள் பின்னர் அறிவிக்கப்படுவர்.

செயலாளர் நன்றிகூறியபின் கூட்டம் இரவு 9மணிக்கு முடிந்தது.


## பூந்தோட்டம்

இரண்டாவது மலர்

பெரியார் ஈ. வெ. ரா.,

C.N. அண்ணாதுரைM.A.,

A. இராமசாமி M.A., L.T.

ஆகியோரின்

கருத்துரைகளுடன்

தளபதி அண்ணாவின்

முகப்புப் படத்தோடு

10-2-47 அன்று வெளிவரும்

தனிப்பிரதி 6 அணா.

"பூந்தோட்டம்"

அரிசிப்பாளையம், சேலம்.



## விற்பனைக்குத் தயார்!

பெரியார் அவர்கள் வடநாடு சுற்றுப்பிரயாணத்தின்போது அரித்துவாரம் கன்கல் கலைஞான சங்கத்தில் 'மேல்நாடும் கீழ்நாடும்" என்பது பற்றி ஆற்றிய சொற்பொழிவும், வ. ஆ. திருப்பத்தூரில் நடைபெற்ற சுலோச்சனா—சம்பத் திருமணத்தின்போது "பெண்கள் அலங்காரப் பொம்மைகளா?" என்ற தலைப்பில் பேசிய பேச்சும், "காங்கரஸ் திராவிடனுக்கு விண்ணப்பம்" என்று எழுதிய உருக்கமான கட்டுரையும் தனித்தனிப் புத்தகங்களாக வெளிவந்துள்ளன. திராவிடர்களனைவரும் படித்துப் பயன் பெறவேண்டிய நூல்கள்; குறிப்பாக காங்கரசில் உள்ள திராவிடர்கள் "காங்கரஸ் திராவிடனுக்கு விண்ணப்பம்" என்ற நூலைப் படித்து உணர வேண்டுகிறோம்.

மூன்று புத்தகங்களின் விலை அணா 5. 6-அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு மூன்று புத்தகங்களும் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.



## "மயில்"

புரட்சிக் கவிதைகள், புரட்சிக் கட்டுரைகள்

தமிழ் இலக்கியச்சுவை ததும்பும்

இனிய செந்தமிழ் மொழிகள்

அரசு சமுதாயம் திருந்த

உழைக்கும் ஓர் சிறந்த

மாத புத்தகம்

கட்டுரைகள்

அறிஞர்கள் பலரால் எழுதப்பட்டு

வருகின்றன.

ஏனைய ஊர்களிலும்

ஏஜண்டுகள் தேவை.

விபரங்கட்கு:-

"மயில்" நிலையம்,

கே. எம். சீனிவாசன்,

கிருஷ்ணகிரிரோட்,

திருப்பத்தூர். (வ. ஆ.)

குடி அரசு

1947-ம் பிப்ரவரி மீ 1௳

# சுயராஜ்யத்திலும் அடக்குமுறையா?

அந்தராத்மாவுடன் அடிக்கடி அளவளாவிடும் அஹிம்சா மூர்த்தியின் அடித்தொண்டர்களாகிய காங்கரஸ்காரர்கள் ஆளவந்தார்களாக ஆனபின்பு அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் அடக்குமுறை தாண்டவமாடுகின்றது. 'இம்' என்றால் இடி; 'உம்' என்றால் உதை; 'கொடுமை' என்றால் தடியடி; 'துன்பம்' என்றால் துப்பாக்கிப் பிரயோகம்; மூச்சுவிட்டால் 144.

உழைக்கும் கூட்டத்தார் உதைக்கப்படுகின்றனர். பாடுபடும் மக்கள் ஒடுக்கலாயிற்று. 'உழைக்கிறோம்; ஆனால் உழைப்புக்குத்தக்க ஊதியமில்லை' என்ற ஒப்பாரி ஒருபுறம். 'உழுது பயிரிடுகின்றோம், ஆனால் உண்ண உணவில்லை' என்ற உள்ளக்குமுறல் மற்றோர்புறம். 'ஆடையை ஆக்குகின்றோம், ஆனால் அணிவதற்கு ஆடையில்லை' என்ற அலறல் பிறிதோர்புறம்.

'பஞ்சகாலத்தில் பட்டினியால் பதறுகின்றோமே; இப்பரிதாப நிலைமையைப் பார்த்துப் பரிகாரம் தேடுவதற்குப் பாராள்வோர் முன்வாரார்?' என்று நாள் முழுதும் உழைக்கும் உழைப்பாளி ஏங்குகின்றான். ஆனால் அவ்வுழைப்பாளியின் ஏக்கக்குரல் உலகினை ஆள்வோரின் செவிக்கு ஏறுவதில்லை. அதற்குமாறாக அவ்வுழைப்பாளி பல்வகையாலும் துன்புறுத்தப்படுகின்றான்.

இவையாவும் யாருடைய ஆட்சியில்? அட்லீசர் ஆட்சியிலா? இல்லை; இவ்வளவு கொடுங்கோன்மை அட்லீசர் ஆட்சியில் இல்லவே இல்லையே. பின் யாருடைய ஆட்சியில்? 'மக்களின் நன்மைக்காகவே ஆட்சி மன்றம் புகப்போகின்றோம்; ஆதலின் அன்புகூர்ந்து மங்களகரமான மஞ்சள் பெட்டியில் உங்கள் வாக்குரிமையை வழங்குங்கள்' என்று பல்லைக் காட்டிப் பகட்டுமொழி பேசினார்களே தேசபக்தர்கள்—தியாகிகள், அவர்களின் ஆட்சியில்தான். அவர்களின் ஆட்சியில்தான் அடக்குமுறை அத்துமீறிவிட்டது; அவசரச்சட்டம் ஆட்சி நடத்துகிறது. யாரையும் காரணங்காட்டாது கைது செய்யலாமாம். கால வரையறையின்றிக் கடுஞ்சிறையில் கைதிகளாக வைத்திருக்கலாமாம். இவையாவும் மக்களின் நன்மைக்காகத்தானாம். இப்படிப்பட்ட தேசபக்தர்களின் ஆட்சிக்குத்தான் சுய ஆட்சி என்று பெயராம். இப்புண்ணியாத்மாக்களின் ஆட்சியை என்னென்றியம்புவது? இவர்களின் ஆட்சி நிலைக்குமா?

எப்படி நிலைக்குமென்று நாம் நம்புவது? உலக வரலாறு கொடுங்கோன்மையாட்சிக்கு நீண்டகாலம் கொடுக்கவில்லையே.

'நான் அரசன், கடவுளின் பிரதிநிதியாக வந்து ஆட்சி நடாத்துகின்றேன்; கடவுளின் அம்சமுடையவன், எனவே என் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடந்துதான் ஆகவேண்டும்; என் பேச்சிற்கு மாற்றுப் பேச்சுப் பகர்வீர்களாயின் உங்களை அடக்குமுறையால் அடக்கிவிடுவேன்' என்று ஜார் மன்னன் அன்று பாட்டாளி மக்களைப் பார்த்து ஆணவமாகப் பேசினான் அவன் நிலை என்னவாயிற்று?

'உலகத்தில் ஆளப்பிறந்தவர்கள் ஆரியர்கள்; ஜெர்மானிய மக்கள் அனைவரும் ஆரியர்கள், எனவே ஆளப்பிறந்தவர்கள்; உலகத்தில் ஏனைய மக்கள் ஜெர்மானியரின் ஆட்சிக்குட்பட்டு அடிமைவாழ்வு வாழவேண்டும்' என்று அன்று ஹிட்லர் கூறினான். அதற்காக அவன் எதையும் செய்தான். 'My motto is not to crush the enemies through a particular means, but to crush the enemies by all and any means' அதாவது 'என்னுடைய குறிக்கோள் எனது விரோதிகளைக் குறிப்பிட்ட ஓர் வகையில்தான் நசுக்கவேண்டுமென்பதல்ல; எல்லா வகைகளையும், எந்த வகையையும் கையாண்டு எனது பகைவரை நசுக்குவது என்பதுதான்' என்று ஆணவமொழி பேசினான் ஹிட்லர். அவன் நிலை என்ன ஆயிற்று?

இவையாவையும் நன்கு அறிந்த தேசியத் தோழர்கள்தானே இப்போழுது நாட்டில் ஆட்சி செலுத்துகின்றனர்? பின்னர் ஏன் இவர்கள் இக்கொடுங்கோல் ஆட்சிக்கு முனைந்துவிட்டனர்? 'கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே' என்ற பழமொழிக்கு இலக்காயுள்ள நமது தேசியத் தோழர்கள் தங்கள் ஆட்சியை இவ்வண்ணம் நடத்துவதைப்பற்றி நமக்கு வியப்பு இல்லைதான். எனினும் அவர்களைக் கண்டு பரிதாபப்படுகின்றோம். ஆள்கின்றவர்களைக்கண்டு பரிதாபப் படுவதைக்காட்டிலும் அவர்களின் பேச்சைக்கேட்டு தண்டவாளத்தைப் பெயர்த்தும் தந்திக்கம்பியை அறுத்தும், அஞ்சல் நிலையங்களை அக்கினிக்கிரையாக்கியும் காலித்தனம் செய்தவர்கள் சிறைச்சாலைக்குச் சென்று திரும்பி வெளிவந்த பின்னர் ஆகஸ்ட் தியாகிகளானார்களே, அவர்

களைக்கண்டு நாம் பெரிதும் பரிதாபப் படுகின்றோம்.

வருங்காலத்தில் தங்களுக்குப் பெருத்த விபத்து ஏற்படும் என்பதையுணராமல் இக்கொடுங்கோல் ஆட்சி நடாத்தி வருகின்றனரே இதற்குக் காரணம் தான் என்ன?

பேராசைதான். ஆம்! அன்று 'உலகத்தில் ஆளப்பிறந்தவர்கள் ஆரியர்கள்' என்று கூறி அழிவு வேலையில் இறங்கினானே ஹிட்லர், அதுவும் உலகத்தை ஏகக்கொடையில் நிறுத்தி ஆள வேண்டுமென்று பேராசை கொண்டதால்தான். 'ஆண்டவனின் அம்சமாக இருந்து ஆளுகின்றேன்' என்றுகூறி பாட்டாளி மக்களைப் பல்வகையாலும் துன்புறுத்தினானே ஜார் மன்னன், அதுவும் பேராசையினால்தான். அதே பேராசையைத்தான் முதலாளிகள், பணக்காரர்கள், பார்ப்பனர்கள் ஆகியோரின் கூட்டு ஸ்தாபனமாகிய காங்கிரஸ் இன்று கொண்டிருக்கின்றது. இப்பேராசை நிறைவேறுமா? பொறுத்துப்பார்ப்போம்.

காங்கிரஸ்காரர்களும் ஆங்கிலேயர்களும் மறைமுகமாக ஒப்பந்தம் செய்துகொண்டுதான் இன்று இவ்வடக்குமுறைச் சட்டத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்று இயம்பவேண்டியிருக்கின்றது. இவர்கள் இவ்வடக்குமுறைச் சட்டத்தை ஏற்படுத்த வேண்டிய காரணம் யாதோ?

காங்கிரஸ்காரர்கள் தாங்கள் விரும்பியவாறெல்லாம் கூத்தடிப்பதற்கு இடமளியாதிருக்கும் ஏனைய கட்சிகளைத் தொலைத்துக் கட்டுவதற்குத்தான் இச்சட்டத்தை ஏற்படுத்தியுள்ளனர். முஸ்லிம்லீகர் காங்கிரஸ்காரர்களின் கபட நாடகங்களை உலகிற்குத் தக்கமுறையில் எடுத்துக் காட்டுகின்றனர். எனவே இச்சட்டம் இயற்றுவதின் மூலமாவது முஸ்லிம் லீகைத் தொலைத்துவிடலாம் என்று கனவு காண்கின்றனர் காங்கிரஸ்காரர்கள். இச்சட்டம் அமுலுக்கு வந்தவுடனே பஞ்சாபில் குறிப்பிடத்தக்க லீக் தலைவர்களும் 100க்கணக்கான முஸ்லிம்களும் கைதுசெய்யப்பட்டனர்; முஸ்லிம் காரியாலங்கள் சோதனை செய்யப்பட்டன; முஸ்லிம் மாதர்களின் ஊர்வலம் கலைக்கப்பட்டது. எதிர்பாராத இச்செயல் இஸ்லாம் மதத்தினர் அனைவருடைய கவனத்தையும் ஈர்த்துள்ளது. ஆனால் தங்கள் குறிக்கோளை நிறைவேற்றுவதில் எவ்வகை அல்லல்களுக்கும் அஞ்சாது கண்ணும் கருத்துமாய்ப் போராடிவரும் முஸ்லிம்கள் இச்சட்டத்தைக்கண்டு கடுகளவேனும் கலங்கவில்லை.

முஸ்லிம் லீகர்கள் கைது செய்யப்பட்டதற்குக் காரணகர்த்தாக்கள் யாவர் என்பது தெரியவில்லையென்று பேசப்பட்டது. பண்டித ஜவகரை உபதலைவராகக் கொண்ட இடைக்காலசர்க்கார் இதற்குப் பொறுப்பில்லை என்றுங் கூறப்பட்டது. பின்னர் இதற்கு யார் பொறுப்பாளியாவர் என்று கேட்கின்றோம். இடைக்கால சர்க்காரின் உபதலைவருக்கோ அல்லது பஞ்சாப் பிரதமருக்கோ தெரியாமலா இந்த அவசரச்சட்டம் அமுலுக்கு வந்திருக்கும்?

எதிர்பாராதவகையில் லீக் தலைவர்கள் கைதுசெய்யப்பட்ட காரணத்தால் முஸ்லிம் லீகர்கள் பயந்து காங்கரசின் ஏகபோக ஆட்சிக்கு ஆதரவு காட்டுவார்கள் என்று காங்கரஸ் கருதுமாயின் அதைவிடப் பயித்தியக்காரத்தனம் வேறொன்றிராது என்று கூறுவோம். அடக்குமுறையைப் பயன்படுத்தித் தங்களை அடிமைப் படுத்தலாம் என்ற காங்கரசின் சூழ்ச்சியை லீகர்கள் புரிந்து கொண்டனர்; ஆத்திரமடைந்தனர். இவர்களின் ஆத்திரம் நாட்டில் பெரும் போருக்கு வித்தாக முடியுமோவென ஐயுற்றனர் காங்கரஸ்காரர்கள்.

உடனே 'பொதுமக்களின் நலனைக் கருதியே இச்சட்டம் ஏற்படுத்தப்பட்டது. அது முஸ்லிம்லீகர்களைக் கைதுசெய்ய வேண்டிய நிலையையுண்டாக்கிவிட்டது. முஸ்லிம் லீகர்களைக் கைதுசெய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த அவசரச் சட்டத்தைக் கொண்டுவரவில்லை' என்று பேசப்பட்டது உடனே லீக் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். பின்னர் மீண்டும் பஞ்சாபில் முஸ்லிம் லீக் தலைவர்களையும், 600, 700 முஸ்லிம் தொண்டர்களையும், முஸ்லீம் மாதர்களையும் கைது செய்துள்ளனர்.

இவ்வண்ணம் முஸ்லிம் லீகர்களைக் கைதுசெய்தும், விடுதலை செய்தும், மீண்டும் கைது செய்தும் (அச்சுறுத்தலின் மூலம் லீகர்கள் பயந்து தங்கள் (காங்கரஸ்காரர்) விருப்பத்திற்கிணங்கி விடுவார்கள் என்று காங்கரஸ்காரர்கள் கருதுகின்றனரா? அரசியல் நிர்ணயசபையில் கலந்துகொள்வதா, இல்லையா என்பதைப்பற்றி அகில இந்திய முஸ்லிம்லீக் காரியக் கமிட்டியில் சிந்தித்துக்கொண்டிருக்கும் இந்நேரத்தில் அடக்குமுறைச் சட்டத்தைப் பயன்படுத்தி முஸ்லிம்களைச் சிறைக்கோட்டம் புகுத்துவதின் காரணமாக லீகர்களைப் பணிய வைத்துவிடலாம் என்று காங்கரஸ் கருதுகின்றது போலும். ஆனால் இதன் விளைவு என்னவென்பதை விரைவில் உணரும் நாள் அண்மையில்வரும் என்பது திண்ணம்.

வியாதி பெரிதாக விருந்தால் அதை மருந்து கொடுத்துப் போக்குவதைவிட்டு

இஞ்சக்ஷன்மூலம் எளிதாகவும், விரைவிலும் போக்கிவிடலாம். இது நடைமுறை. இன்று காங்கரஸ்காரர்கள் அடக்குமுறைச் சட்டத்தைப் பிரயோகித்திருப்பது முஸ்லிம்லீகர்கள் தங்கள் இலட்சியமாகிய பாக்கிஸ்தானைப் பெறுவதற்கு வியாதிபோலுள்ள காங்கரஸ்காரரின் குறுக்கீட்டை விரைவிலும் எளிதாகவும் போக்கிக்கொள்ளும் இஞ்சக்ஷன் போலுள்ளது. எனவே இச்சட்டத்தைக் கண்டு முஸ்லிம்கள் மருளமாட்டார்கள். ஆனால் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள்.

இன்று இந்தியாவென்ற உபகண்டத்தின் பல்வேறு பாகங்களிலும் நடைபெற்றுவரும் கலவரங்களின் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் தங்கள் உயிரை இழந்தனர், இழக்கின்றனர், இழப்பர்; இலட்சக்கணக்கான பொருள்களையும் இழந்தனர். இதனால் இந்தியாவிலுள்ள முஸ்லிம்களேயன்றி இந்தியாவிற்கு வெளியிலேயுள்ள துருக்கி, ஈஜிப்ட், ஈரான், ஈராக், பலுசிஸ்தான், ஆப்கானிஸ்தான் முதலிய நாடுகளிலுள்ள முஸ்லிம்களும் ஆத்திரமடைந்துள்ளனர் என்று கூறலாம்.

தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள் வெள்ளையரால் துன்புறுத்தப்படுவதின் காரணமாக நாம் ஆத்திரமடைகின்றோமல்லவா? ஆத்திரப்படுவது மாத்திரமன்றி அவர்களின் துன்பத்தைப் போக்க எவ்வளவோ நடவடிக்கைகள் எடுக்கின்றோம். எனவே ஒரே மதத்தினால் கட்டுண்ட முஸ்லிம்கள் தங்கள் இனத்தவரின் துன்பத்தைக்கண்டு சகிக்காது ஆத்திரமடைந்தார்களாயின் அதில் நமக்கு ஆச்சரியமில்லை.

ஆகவே காங்கரஸ்காரர்கள் இந்தியாவிலுள்ள முஸ்லிம்களைப் பகைத்துக்கொள்ளும் வகையில் வெளிநாட்டு முஸ்லிம்களையும் பகைத்துக்கொள்கின்றவர்களாகின்றனர். இரண்டு பகைகளும் ஒன்றுசேர்ந்திடின் இந்தியாவில் ஓர் பெரும்போர் மூளும் என்பது திண்ணம். இப்போரைக் காங்கரஸ்காரர்கள் வரவேற்கின்றனரா? போர் மூண்டால் கஷ்டநஷ்டங்களுக்காளாகும் மக்கள் யாவராயிருப்பர்? பெரும்பாலும் பாட்டாளிமக்களாகத்தானே இருக்கமுடியும்? இந்நிலையைக் காங்கரஸ்காரர்கள் உணர்ந்து, போர்மூளாவண்ணம் செய்வார்களா?

முஸ்லிம் லீகர்களையேயன்றி ஏனைய கட்சியினரையும் தொலைத்துக்கட்டத் திட்டம் தீட்டுகின்றனர் காங்கரஸ்காரர்கள். அதற்கு இவ்வடக்குமுறைச் சட்டம் அவர்களுக்குப் பக்கபலமாயுள்ளது. இச்சட்டத்தின்படியே இன்று நாட்டிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியினர் கைது செய்யப்படுகின்றனர். கம்யூனிஸ்ட் காரியாலயங்கள் சோதனை செய்யப்படுகின்றன. காங்கரஸ்கட்சிதான் எங்கள் தாய் ஸ்தாபனம் என்று கூறிக்கொள்வதில் பெருமைகொண்ட கம்யூனிஸ்ட்களைத் தொலைத்துக்கட்டக் காங்கரஸ் ஏன் முனையவேண்டும்? காங்கரஸ் கட்சியைத் தவிர்த்து ஏனைய கட்சிகள் நாட்டில் இருக்கக்கூடாது என்பதற்கா? அல்லது முஸ்லிம் லீகர்களை மாத்திரமன்றி ஏனைய கட்சியினரையும் மக்களின் நலன் கருதி அடக்குகின்றோம் என்று உலகத்தை ஏய்ப்பதற்கா இன்று கம்யூனிஸ்ட்கள் கொடுமைப் படுத்தப்படுகின்றார்கள்?

நாட்டிலே ஏற்படும் குழப்பங்கள் அத்தனைக்கும் கம்யூனிஸ்ட்கள்தான் காரணம் என்று எப்படிக் கூறமுடியும்? மதுரை வைத்தியநாத அய்யர் போன்ற ஒரு சிலரைக் கைது செய்திருந்தால் மதுரையில் மேற்கொண்டும் மேற்கொண்டும் கலவரங்கள் நடைபெற்றிருக்குமா? அப்படியே கம்யூனிஸ்ட்களின் தூண்டுதலின் பேரிலேயே தொழிலாளர்கள் ஆங்காங்கு வேலை நிறுத்தங்கள் செய்வதாக வைத்துக்கொண்டாலும், அதற்குக் கம்யூனிஸ்ட்களைச் சிறைச்சாலையில் அடைத்துத் துன்புறுத்துவதைவிட நாம் 18-1-47ல் குடியரசில் எழுதியதைப் போன்று 'தொழிற்சங்கங்களில் (Trade union) தொழிலாளர்கள் அல்லாதார் தொழிற் சங்க நிர்வாகிகளுள் பகுதிபேர்களுக்கு மேற்படாமல் இருக்கலாம்' என்ற சட்டத்தை எடுத்துவிடுவதுதானே? அச்சட்டம் இருப்பதால்தானே இன்று கம்யூனிஸ்ட்களும் காங்கரஸ் சோஷலிஸ்ட்களும் தொழிற் சங்கங்களில் புகுந்துபோட்டிப் போட்டுக்கொண்டு தொழிலாளர்களைக் கலவரத்திற்காளாக்குகின்றார்கள்?

கலவரங்களுக்குக் காரணகர்த்தாக்களாயிருக்கும் கம்யூனிஸ்ட்கள், காங்கரஸ் சோஷலிஸ்ட்கள் ஆகிய இரு கூட்டத்தார்களில், பெரும்பாலும் கம்யூனிஸ்ட்கள் மாத்திரம் அவசர அடக்குமுறைச் சட்டத்திற்குட்படவேண்டியவர்களாவதின் மர்மம் என்ன? காங்கரஸ் சோஷலிஸ்ட்கள் அவசரச் சட்டத்திற்கு ஆளாகாமலிருப்பதற்குக் காரணம் அவர்கள் காங்கரசின் செல்லப்பிள்ளைகள் என்பதுதானா? அப்படியே என்றாலும் அவர்கள் எத்தனை நாட்கள் செல்லப்பிள்ளைகளாயிருக்கமுடியும்?

நமது மாகாணத்தில் ஆட்சி(?) செலுத்தும் முதல்மந்திரியார் பிரகாசம் பந்துலு அவர்கள் "அவசரச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

4-2-47 கீழ்க்கரை (இராமநாட்)
7-2-47 ஆடுதுறை (தஞ்சை ஜில்லா)

இன் காரணத்தை வெளியிற் சொல்லக்கூடாது. சொன்னால் அச்சட்டம் ஏற்படுத்தப்பட்டதின் நோக்கம் நிறைவேறாது" என்று குறிப்பிட்டார். மக்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின் நோக்கத்தை வெளிப்படுத்த அஞ்சியதேன்? வெளிப்படுத்தினால் 'குட்டு' வெளிப்பட்டுவிடுமா? பிரகாசம் பந்துலுகாரு வெளிப்படுத்திதான் நாம் அச்சட்டத்தின் நோக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமா? நன்றாகப் புரிகின்றதே? காங்கிரஸ் கட்சியைத் தவிர்த்து ஏனைய கட்சிகள் நாட்டில் இருக்காமல் செய்வது என்பதுதானே அச்சட்டத்தின் நோக்கம்? இன்று நாடெங்கணும் நடைபெறும் நிகழ்ச்சிகள் நம்மை இம்முடிவிற்குத்தானே வரச்செய்கின்றன. இம்முயற்சியில் காங்கிரஸ் வெற்றிபெறுமா? பொறுத்துப் பார்ப்போம்.

ஆளவந்தார்களாக ஆய்விட்டால் கண்ணை மூடிக்கொண்டு எதை வேண்டுமானாலும் செய்துவிடலாமென்று பொருளா? மக்களின் நலத்தைப் பாதிக்கக்கூடிய முறையில் ஆட்சியின்போக்கு இருக்குமானால் அவ்வாட்சி நீண்டகாலம் நிலைக்குமென்று நாம் எப்படி எதிர்பார்க்கமுடியும்? எனவே ஆளவந்தார்கள் ஆழ்ந்து சிந்திக்கட்டும். அடக்குமுறையால் மக்களின் ஆத்திரத்தைத் தீர்த்துவிடலாம் என்று ஆட்சி செலுத்துவோர் கருதுவார்களாயின் அவ்வடக்குமுறையே அவர்களின் ஆட்சியின் இறுதிக் கட்டத்தைக் காட்டிவிடும் என்று எச்சரிக்கின்றோம்.

## பெரியாருக்கு அழைப்பு

தற்கால காங்கிரஸ் ஆட்சிக்கு அடக்குமுறையைத்தவிர வேறு திட்டம் இல்லை என்பதும், காங்கிரஸ் தோழர்கள் பெருர்பாலோருக்குக் கலவரம் செய்தல், கல் எறிதல், காலித்தனம் செய்து மற்ற கட்சியாரின் வேலைகளை, பிரசாரங்களைத் தடுப்பது தவிர வேறு திட்டம் இல்லை என்பதும் காங்கிரஸ் சர்க்காருடையவும், காங்கிரஸ்காரருடையவும் இந்த 5, 6 மாத நடவடிக்கையில் இருந்து பொதுமக்கள் உணரலாம். இதுவரை ஒரு விஷயத்தில் சற்று மறைவாய் இருந்த சர்க்கார் அதாவது திராவிட கழகவிஷயத்தில் வெளிப்படையாய்ப்பிரவேசிக்காத சர்க்கார் இப்போது துணிந்து வெளிப்படையாய்த் தங்கள் அடக்குமுறை அட்டூழியத்தைத் துவக்கிவிட்டார்கள்.

திராவிடகழக பத்திரிக்கைகளுக்கு 15000 பத்திரிக்கைக்கு கோட்டா கேட்டால் 1500 பத்திரிக்கைகளுக்கே கோட்டா கொடுத்து வருகிறார்கள். இப்போது அதற்கும் ஆபத்தை உண்டாக்கிவிட்டார்கள். அதாவது "குடியரசு" "விடுதலை" பத்திரிகைகள் நின்றுபோய் விட்டன; அதற்குக் கோட்டா வேண்டியதில்லை என்று சென்னை சர்க்கார் டெல்லி சர்க்காருக்கு எழுதிவிட்டார்கள். எனவே பிப்ரவரியில் பத்திரிக்கைகள் வெளியாகுமா என்பது சந்தேகம்.

அடுத்தபடியான அட்டூழியமாக, பெரியார் செல்லுமிடங்களில் 144-தடை உத்திரவு போடப்பட்டு வருகிறது. முதல் நாள் தூத்துக்குடிக்குப் போட்டார்கள்; அதுவும் 1500ரூபாய் போல் செலவு செய்து, 150

## "விமலா"

5-3-47ல் சென்னை சௌந்தர்ய மஹால் மண்டபத்தில் திராவிட மறுமலர்ச்சி நாடக சபையாரால் திராவிட கழக நிதிக்காக "விமலா" நாடகம் நடைபெறும்.

சென்னைத்தோழர்கள் நிதிக்கு ஆதரவளிக்கவேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

C. D. T. அரசு
N. V. நடராஜன்

## திருமணம்

2-2-47 ஞாயிறன்று காலை 9மணிக்கு அரூர் தோழர் அ. நா. விநாயகம் அவர்கள் தம்பி தோழர் அ. நா. கிருட்டிணசாமிக்கும், ஆலங்காயம் தோழர் அப்பு (எ) கே. துரைசாமி அவர்கள் மகள் தோழியர் கிளியாம்பாவுக்கும் அரூரில் சேலம் நகராண்மைக் கல்லூரித் தலைவர் தோழர் அ. இராமசாமி எம். ஏ., எல். டி. அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும்.

வளைவுகளும், பல பர்லாங்கு தூரம் தொடர்ந்த தோரணம் கொடி ஆகியவைகளும் கட்டப்பட்டு, மேடை, பந்தல் முதலியவை போட்ட பிறகு முதல்நாள் மாலையில் உத்திரவுபோட்டு காலையில் சார்வுசெய்து பெரியாரை மணியாச்சி ஸ்டேஷனிலேயே போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து தடைசெய்து இறக்கிவிட்டுவிட்டார்கள். சரி என்று அதற்குக் கட்டுப்பட்டு அடுத்த நாள் வேறு ஊருக்கு—கடம்பூருக்குச் சென்றால் அங்கும் இரண்டு தாலுக்காக்களில் 144 போட்டு கோவில்பட்டியிலேயே சார்வுசெய்து தடுத்துவிட்டார்கள்.

இதன் காரணம், கருத்து என்ன என்று பார்த்தால் காங்கிரஸ் ஆட்சி சர்க்கார் பெரியாருக்கு விருந்தளிக்க அழைப்பு அனுப்பிவிட்டார்கள் என்றுதான் கருதவேண்டி இருக்கிறது. எல்லாம் நன்மைக்கே.

## இயக்கச் செய்திகள்

30-12-46ல் துறையூர் வடக்குத் தெருவில் திராவிட வாலிபர் சங்கம் திறவப்பட்டு, அதற்குத் தோழர்கள் கம். பாலுசாமி தலைவராகவும், வை. கா. நடேசன் செயலாளராகவும், வெ குழந்தைவேல் பொருளாளராகவும் மற்றும் 7 பேர்கள் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

28-1-47 மாலை 6 மணிக்கு ராசிபுரம் தோழர் மு. காவேரி அவர்களின் "பெரியார் மாளிகை"யில் பேளுக்குறிச்சி தோழர் சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் ஆண்டாள்நினைவு பெரியார் நூல் நிலையத்தைச் சேலம் தோழர் எ. சித்தையன் திறந்துவைத்தார். வ. உ. சிதம்பரம்பிள்ளை உருவப்படத்தைப் புலவர் அ. சாம்பசிவனார் திறந்துவைத்தார். மூவலூர் இராமாமிர்தத்தம்மாள் பெண் கல்வியைப்பற்றிப் பேசினார். தோழர் ம. க. வெங்கடபதி அறிக்கை படித்தார். நன்றியுடன் முடிவுற்றது.

o o

1-1-47 மாலை 5 மணிக்கு நல்லிபாளையம் தோழர் குட்டியண்ணன் அவர்கள் தலைமையில் நல்லிபாளையம் திராவிடர் கழகம் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் திறக்கப்பட்டது. அன்று மாலை 7 மணிக்குத் தோழர் மாரியப்பன் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் இரா நெடுஞ்செழியன் 'திராவிடர் கழகமும், திராவிடரின் நிலையும்' என்பது பற்றி விரிவாகச் சொற்பொழிவாற்றினார்.

o o

6-1-47ல் நல்லிபாளையம் திராவிடர் கழக அமைப்புக் கூட்டம் தோழர் மு. செல்லப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பூ. க. மாரப்பண்ணன், சு. வெங்கடாசலம், மு கிருட்டினசாமி, சுவாமிநாதன், ப. செ பழனிபாண்டி முதலிய தோழர்கள் முறையே தலைவர், உபதலைவர், செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளராகவும், மற்றும் எழுவர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o —— o

## திருமணம்

27-1-47 காலை 9-30 மணிக்கு அருப்புக்கோட்டையில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் தோழர்கள் சின்னவெள்ளையா— சவுண்டம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் சீரிய முறையில் வெகு சிறப்புடன் நடைபெற்றது. திருமணத்திற்கு 1000க்கு மேற்பட்ட மக்கள் வந்திருந்தனர். தோழர் எஸ். எஸ். பழனிச்சாமி அவர்கள் சீர்திருத்தத் திருமணத்தின் அவசியத்தைப்பற்றி விளக்குமாறு தலைவரைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, பெரியார் அவர்கள் சிறிதுநேரம் திருமண முறைகளைப் பற்றி விளக்கமாகவும், சுருக்கமாகவும் பேசி முடித்தார். தோழர் பழனிச்சாமி அவர்கள் வந்திருந்தோர் அனைவருக்கும் மணமக்கள் பெற்றோர் தோழர் க. ம. கா. காமாட்சி செட்டியார் முதலியோர் சார்பாக நன்றி கூறினார்.

மணமக்கட்குப் பல கழகங்களின் சார்பில் மலர்மாலைகள், வாழ்த்துரைகள் திராவிட தலைவர், தளபதியின் அழகிய உருவப்படங்கள், இயக்கப் புத்தகங்கள் முதலியனவும், வெள்ளி சாமான்கள் முதலியனவும் பரிசாக அளிக்கப்பட்டன. திருமணத்தை முன்னிட்டு மணமக்களின் சார்பில் மணமகனார் தோழர் சின்ன வெள்ளையா அவர்களால் "விடுதலை" "குடியரசு" வளர்ச்சிக்காக ரூ. 50 நன்கொடையாகப் பெரியார் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

---

7-1-47ல் வாழ்குடைத் திராவிடர் கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்று தோழர்கள் வி. எம். தங்கவேலு தலைவராகவும், வி. பி. அண்ணாமலை உபதலைவராகவும், வி. எஸ். கிருஷ்ணசாமி செயலாளராகவும், வி. எல்லப்பன் துணைச்செயலாளராகவும், வி. மு. சுப்பராயன் பொருளாளராகவும், மற்றும் 8பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

2-1-47 வியாழக்கிழமை மாலை 3 மணிக்குத் தொட்டியத்துக்கு அடுத்த சித்தூரில். ஷெட்யூல்டு வகுப்பு பெடரேஷன் சார்பில் ஒரு மாபெருங்கூட்டம் தோழர் வ. வீராசாமி பி.ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்கள் திராவிடர் கழகக்கொடிகளுடனும், பெடரேஷன் கொடிகளுடனும் 'பெரியார் வாழ்! அம்பேத்கார் வாழ்க! நெடுஞ்செழியன் வாழ்க! வீராசாமி வாழ்க!' என்ற வாழ்த்தொலிகளுடனும் சீனுவாச நல்லூரிலிருந்து கூட்டத்திற்கு அழைத்து வரப்பட்டார். தலைவர் வீராசாமி அவர்களும், தோழர் நெடுஞ்செழியன் அவர்களும் திராவிடர் கழகம் குறித்தும், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் குறித்தும் விரிவான சொற்பொழிவாற்றினார்கள். பிறகு தோழர் சுப்பிரமணியன் அவர்கள் குழந்தைக்குத் தோழர் நெடுஞ்செழியன் அவர்களால் "திராவிடமணி" எனப் பெயர் சூட்டப்பட்டது. அதன் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

## மதிப்புரை

### 'பூந்தோட்டம்'

'பூந்தோட்டம்' என்ற மாத வெளியீட்டின் பதிப்பாசிரியராகத் திராவிட மாணவர் கழகத் துணைத் தலைவர் தோழர் வை. திருநாவுக்கரசு அவர்கள் ஆவர். திராவிடர்களின் முன்னேற்றத்தையும், தமிழ்மொழி வளர்ச்சியையும் அடிப்படையான குறிக்கோள்களாகக்கொண்டு எழுதப்பட்ட கட்டுரைகள் மிளிர்கின்றன பூந்தோட்டத்தில். முதல் வெளியீட்டில் பெரியாரின் அழகிய படம் முகப்பிதழிலும் பெரியாரின் கட்டுரை உள்ளிதழிலும் இலங்குகின்றன. திராவிடர்கள் ஒவ்வொருவரும் பூந்தோட்டத்தைப் படித்துப் பயன்பெறுதல் நலம்.

இதன் விலை 6 அணாதான்.

கிடைக்குமிடம்: வை. திருநாவுக்கரசு, அரிசிப்பாளையம், சேலம்.

## திருத்தம்

25-1-47 குடியரசு 8ம் பக்கத்தில் 'வேண்டுகோள்' என்ற தலைப்பில் விகசம் பூ. எஸ். கிருஷ்ணசாமி என்றிருந்ததை வி. எஸ். கிருஷ்ணசாமி, செயலாளர் என்று திருத்திக்கொள்ளவும்.

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcheryatreet, ERODE.